# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## செய்திக் குறிப்பு

செய்தி வெளியீட்டு எண்: 57/2020 நாள்: 31.12.2020

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அண்மையில் நடத்தி முடிக்கப்பட்ட 18 தொல்லியல் அலுவலர் பதவிகளுக்கான தேர்வில் தமிழ் வழியில் படித்த மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் செய்தி வெளிவந்துள்ளது. இது முற்றிலும் தவறான செய்தியாகும். இதுகுறித்த விளக்கம் பின்வருமாறு:

தொல்லியல் அலுவலர் பதவிகளுக்கான தேர்வுகள் 29.02.2020 அன்று நடத்தப்பட்டு 29.12.2020 அன்று தேர்வாணையத்தில் நடைபெற்ற கலந்தாய்வு மூலம் அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளது.

இப்பதவிக்கு முதுகலை தமிழ், வரலாறு, தொல்லியல் படிப்புகள் மற்றும் தொல்லியலில் முதுகலை பட்டயப் படிப்புடன், இளங்கலையில் தமிழை ஒரு பாடமாக கட்டாயமாக படித்திருக்க வேண்டும் என்பது கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

தேர்வு எழுதிய மாணவர்களின் கல்வித் தகுதி, இடஒதுக்கீட்டு விதிகள், போட்டித் தேர்வில் பெற்ற மதிப்பெண் மற்றும் தொடர்புடைய மூலச்சான்றிதழ்களைச் சரிபார்த்தல் அடிப்படையில் மட்டுமே இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தேர்வு பெற்ற 18 மாணவர்களும் தமிழகத்தை சார்ந்தவர் ஆவர். மேலும் இந்த 18 மாணவர்களில் தமிழக அரசின் தொல்லியல் துறையில் முதுகலை பட்டயப் படிப்பினை பெற்றுள்ள மாணவி ஒருவரும் தேர்ந்தெடுக்கபட்டுள்ளார். எனவே, ஊடகங்களில் பிற மாநிலத்தவருக்கு வாய்ப்பளிப்பதாகவும், தமிழக மாணவர்களை புறக்கணிப்பதாகவும் வெளிவந்துள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானதாகும்.

இதுமட்டுமல்லாமல் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்தியும் முற்றிலும் தவறானது. தேர்வு நடத்தப்பட்ட 18 பணியிடங்களில் இடஒதுக்கீட்டு விதிகளின்படி ஒரு பணியிடம் அருந்ததியருக்காக ஒதுக்கப்பட்டு அப்பணியில் அருந்ததியர் பிரிவைச் சேர்ந்த மாணவர் ஒருவரே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**செயலாளர்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்